உ

சிவமயம்.

# சிறுத்தொண்டநாயனார் புராணம்.

இஃது

யாழ்ப்பாணம் வட்டுநகர்

மகாவித்துவான்

மு. ஆறுமுகம்பிள்ளை

அவர்களால் இயற்றப்பட்டு,

மூன்றும் பதிப்பு.

சுன்னாகம்

சச்சிதானந்த யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy Right.

1927.

T 179

உ

சிவமயம்.

யாழ்ப்பாணம் வட்டுநகர் பிரமஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய
சிவாசாரியாரால் சொல்லப்பட்டது.

# இருபத்தொரு சீர்க்கழிநெடில் அடிவிருத்தம்.

சீர்கொண்டயாழ்ப்பாணவட்டுநன்னகருறைதய
சிவஞானசைவநிலையன்
செந்தமிழ்க்கலைஞர்புகழகதிர்காமரம்பலவாணர்
செய்தவத்தீன்றசிறுவன்
சிங்கநகருப்பானவர்த்தகப்பெருநிலைமைசெய்திடு
முதாரசீலன்.

பார்கொண்டவெற்பின்னைமன்னவன்சைவனடை
பரமுற இலங்கிவளர
பத்தியுறுசுந்தரசிறுத்தொண்டநாயனார்
பழமறைபுராணமதனை
பனுவலுறுமகவனடைவசனனடைசெய்துநீ
பாரித்தியற்றுகென்ன

வார்கொண்டமண்டலநன்னாயகப்பேர்
முதலிமாமரபுவந்தநிலவு
வருபுனிதமுருகேசர்சிவதன்மதெய்வதம்
வரபலத்துற்றமதனை
வனைகம்பராமாயணப்பாவைமூழ்கினனி
வலிதுமேதக்கெறியுமேமகம்

ஏர்கொண்டசித்தாந்தசைவப்பிரசங்கசபை
யெதிருறுசபாரஞ்சிதம்
எண்ணரியதென்மொழிப்பலகலைத்துறையெலாம்
இயல்பொடுகடந்தநிபுணன்
இன்பதமிழாறுமுகபாவலன் இயற்றினன்
இதற்குநேர்வேறுமுளதோ.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# விசேஷ விளம்பரம்.

ஊசலானது முன்னும் பின்னும் அசைந்து ஆடுவது போலப் பிறப்பு இறப்பு நரை திரை மூப்புப் பிணி என்னுந் தீராப்பெருந் துக்கத்தை அநுபவித்து இடைவிடாதுழன்று திரிகின்ற ஆன்மாக்கள், தாவரமுதலிய கீழுள்ள யோனிபேதங்களிற் பிறவாமல் அவற்றினின்றும் நீங்கி, மிக மேலாகிய மானுடப்பிறவியிலே பிறக்கக்கிடைத்தது, பசுபதியாகிய சிவபெருமானை மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் வழிபட்டுப் பரமுத்தியாகிய பேரின்பத்தை அநுபவிக்கும் பொருட்டேயாகும். அங்ஙனமாயினும், சிவசாத்திரங்கள் நடைபெறாத தேசத்தைவிட்டு, அவை நடைபெறுகின்ற புண்ணிய தேசங்களிலே பிறப்பது மிகப் பெரிய புண்ணியமாகும். அதிலுந் தாழ்ந்தசாதியைவிட்டு உயர்ந்தசாதியிலே உயர்ந்த குடியிலே பிறப்பது உத்தமோத்தம புண்ணியமாகும். அதினும் புண்ணியமென்று சொல்லிப் பாவத்தொழிலைக்காட்டி, ஏமாத்துகின்ற பரசமயப்படுகுழியிலே பிறவாது சற்சமயமாகும் சைவசமயத்திலே பிறத்தல் மிகப் பெரிய அருமையில் அருமையாகும். அத்துணை அருமையாகிய இம் மானுடசரீரம், கருப்பத்திலே அழியினும் அழியும். மாதாவின் வயிற்றினின்றும் பிறந்தவுடனே அழியினும் அழியும். பிறந்து சிலகாலஞ்சென்றபின் பாலப்பருவத்திலே அழியினும் அழியும். அதற்குமேலுள்ள காளைப்பருவத்திலே அழியினும் அழியும். நரை திரை முதிர்ந்த கிழப்பருவத்திலே அழியினும் அழியும். எப்படியும் இவ்வுடம்பு அழியும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. நீர்க்குமிழிக்குப் பூண்கட்ட அது

நின்றாலும் இவ்வுடம்பு நில்லாதே, இது மண்ணாவது சத்தியம் சத்தியம். ஐயையோ இவ்வுடம்பு உள்ளபொழுதே ஆன்மாக்களெல்லாம் அநாதியே ஆணவம் மாயை கன்மமென்னும் மூவகைப் பாசங்களினாலே கட்டப்பட்டன என்றும், அப்பாசக்கட்டை நசித்து, முத்தியின்பத்தைக் கொடுக்கும் பொருட்டுப் படைத்தல் காத்தல் அழித்தல் அருளல் மறைத்தல் என்னும் ஐந்துதொழில்களையும் செய்கின்ற ஒருகடவுள் இருக்கின்றார் என்றும், அவர் அத்தொழில்செய்வது பூவும் மணமும்போலத் தம்மோடு ஒற்றுமையுடைய சத்தியைக் கொண்டு என்றும், அதுபற்றி அவ்விருவருமே ஆன்மாக்களாகிய நமக்குப் பரமபிதாமாதா என்றும், அக்கடவுளாவார் வேதாகம சிவபுராண முதலியவற்றால் உணர்த்தப்படுகின்ற பரமபதியும் அநாதியே பாசம் இல்லாதவருமாகிய சிவபெருமானே என்றும், அவருக்கு ஆட்பட்டாலன்றி முத்திகிடையாது என்றும். அவரைவழிபடும் உயர்வொப்பில்லாத சற்சமயம் சைவசமயமேயென்றும், நன்றாகத்துணிந்து கொலை களவு கள்ளுணல் புலாலுணல் பொய்பேசல் குருத்துரோக முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம் நீதி உண்மை பொறுமை குருவிசுவாசம் முதலிய புண்ணியங்களையுடையர்களாய், மாதாவானவள் குழந்தைக்குவந்த வியாதியை அறிந்து, இரங்கி அக்குழந்தையின் பருவத்திற்கு இசைய மருந்துகொடுத்து அவ்வியாதியைத் தீர்த்தல்போல, மாணாக்கருக்குவந்த பிறப்பு இறப்பாகிய வியாதியையறிந்து இரங்கி அவர் பருவத்திற்கு இசையத் தீக்ஷைசெய்து அவ்வியாதியைத்துடைக்குந் திறமையையுடைய சைவாசாரியரையடைந்து சிவதீக்ஷைபெற்றவராய், சிவமூலமந்திரசெபம் விபூதிதாரணம் உருத்திராக்ஷதாரணம் சிவலிங்கபூசை சிவாலயவழிபாடு சிவனடியாரைப்பேணல் சிவத்தியானம் சிவசாத்திரங்களைக்கற்றல் கேட்டல் சிந்தித்தல் பிறருக்குப்போதித்தன் முதலிய இவைகளெல்லாம் அத்துவிதானந்த முத்திக்குரிய

மிகமேலாகிய சிவசாதனங்கள் என்றும், வேதாகமங்களிற் சொல்லும் உரித்திரமந்திரங்களுள் நடுநாயகமாக விளங்கும் சிவமூலமந்திரமே முத்திக்கு அதி உத்தமோத்தம மந்திரம் என்றும் பலவிதஞானங்களுள் சிவஞானமே மிகமேலானது என்றும் நிச்சயித்து, மனம் புத்தி சித்தமுதலிய அந்தக்கரணங்கள் நிலைகலங்கியபொழுதும் மறவாது இச்சிவபுண்ணியத்தெளிவை அநுட்டிக்கின்றவராய்ப், பலாப்பழத்திலேவிழுந்த ஈகள் அதன் பாற்சிக்கிலே முழுகி மீளாது இறத்தல் போலப், பிதா மாதா மனைவி மக்கண்முதலிய சுற்றத்தாரிடத்தும் திரவியம் விளைநிலம் முதலிய பொருள்களிடத்தும் காலத்தையுங் கருத்தையும் முழுமையும் நுழைபவிட்டு மோசம்போகாமல், கள்ளக்கணவனிடத்தே பொய்யன்புகாட்டி நடிக்கின்ற பெண்ணைப்போல, முற்சொல்லியவற்றிலே அன்புடையார்போலநடித்து, அகப்பற்று முழுவதும் சிவபெருமானுடைய திருவடிகளிலே அழுந்தும்படி வைத்து அநுசரித்தல்வேண்டும். அவ்வநுசரிப்பு இப்போது இளமைப்பருவமுடையோம் இன்னுஞ் சிலகாலஞ்சென்றபின் செய்குவம் என்பாராயின், மரணத்துக்கு உரியநாளோ அவர்க்கு உரியநாளோ அது அறிதற்கரியதே. இனிவரும் பிறவியிற் செய்குவம் என்பாராயின் மானுடப்பிறவியேயாதுவருமோ அதுவும் அறிதற்கு அரிதே, ஆதலால் இம்மானுடசரீரம் நீங்கமுன்னர் முற்சொல்லிய சிவபுண்ணியங்களையே இறவாச்செல்வம் எனக்கொண்டு, சிவசாத்திரங்களாலுணர்த்தப்படுகின்ற திருநெறியாகும் சரியை கிரியை யோகங்களை அநுட்டிப்பாராயின், அப்புண்ணிய பலத்தினலே பாவம் புண்ணியம் என்னும் இரண்டும் சமத்துவப்படும். படவே, பசுபதியாகிய சிவபெருமான் குருவடிவங்கொண்டு, தமது திருவருட்பார்வையினலே ஞானமாகிய நன்னெறிநை அடைவித்து, முற்சொல்லிய பாசங்களின் வீரியத்தை நசித்து, பசுத்துவத்தைநீக்கித் தம்மைப்போலச் சிவத்துவமாக்கிப்,

பிறந்திறவாப் பெருவாழ்வாகிய பரமுத்தியைப் பாலிப்பார். இஃது உண்மை உண்மை முக்காலும் உண்மை. அதுநிற்க,

சில முடசனேந்திரர்கள், உண்ணல் உடுத்தல் உறங்கல் வாகனமேறல் பவனிவருதல் பொய்வழக்குப்பேசல் சண்டை கலகஞ்செய்தல் தீமைகளாற் பொத்திய சிற்றின்பப்பாடல்களாகிய அல்லிகதை பவளக்கொடிமாலை முதலிய அபத்தநூல்களைக் கற்றல் கேட்டல், காமமாகிய விளக்கைக்கொழுத்தவல்ல கூத்துவிளையாடல் பார்த்தல் முதலியனவும், அவற்றை விருத்திசெய்தற்பொருட்டு பொருளுதவிசெய்தலுமாகிய இவைகளே, மானுடப்பிறவியினுலே சம்பாதிக்கத்தக்க பெரும்பேறென்று, விபரீதவுணர்ச்சியினுலே கெடுமதிகொண்டு, தங்கள்வாழ்நாளெல்லாம் வீணுளாகப் போக்குகின்றுர்கள்.

சிலர் கொலை களவுமுதலிய பாவங்களும் சிவத்துரோகமுதலிய மகாபாதகங்களுமாகிய சரக்குகளை ஏற்றுகின்ற மரக்கலமாகவே, தங்கள் உடம்பைக்கொண்டு நடத்திப்பிரபஞ்சவாழ்க்கையாகிய இருட்டுக்கடலிலே மூழ்கி, மனைவி மக்களென்னும் பெரிய சுறுமீன்வாயிலகப்பட்டுப், பொருளாசை என்கிற திரையினுலே அடிபட்டுக், காமமாகிய சண்டமாருதத்தினுலே மோதப்பட்டுக் கரையேறமாட்டாது பதிசாத்திரங்களைக் கற்றல் கேட்டல் செய்யாதவர்களாய்க், கடவுளும் பாவபுண்ணியங்களும் நரகமோட்சமுமுண்டு, என்னும் உண்மைக்குப் பரமாணுவளவேனும் அஞ்சாநெஞ்சர்களாகிப் பெருவியாதிகள் குடையக்குடைய அவற்றுலே துடிதுடித்து இறந்து, பிறந்து எரிவாய்நரகத்துக்குப் பெருவிருந்தாகத் தொலைகின்றுர்கள்.

மனுநீதி முறைகளும் வேதாகமமுறைகளுந் தவறி முற்பிறப்பிலேசெய்த மகாபாதகக்கூட்டங்களின் சத்தியினுலேகொடியமதிகொண்டு, மனைவி மக்கள் விளைநிலம் திரவியம் என்னும்பெருஞ் சேற்றிலே தங்கள் மனசு முழுகும்படி

நிற்கின்ற, இந்த இருகான்மாடுகளினதும் மனம், பதிசாத்தி ரங்களின் உறுதிப்பொருளாகிய சற்போதசுவெள்ளத்திரை மைமுழுக்காட்டியபொழுதும் சுத்தப்படுமா? படாதே. அம் பாடுகள் அவற்றிற்குச் செவியுங்கொடாவே. பின் எப்பொ ழுது உணருங்கள் என்றால், சிலேட்டுமம்மேற்பட்டுக் கண் கள்சுழிவிழுந்து நாவடங்கி அறிவுகெட்டு, நெருங்கிய துணை யெனப் பற்றியிருந்த பிதா மாதா முதலியோரும் திரவியம் முதலிய பொருள்களும் கைவிட்டு, அன்னியமாகின்ற மர ணாந்தத்தில் பெருங்காற்றானது பிரளயகாலத்திலே மலை மர ங்கண் முதலியவற்றை வேரோடு நிலைபெயர்த்து எறிதல் போல, மரணம் என்னும் மகாவீரன் இவ்வுடம்பினின்றும் ஆன்மாவைவேரோடு நிலைபெயர்த்து எறியும்பொழுதேயா கும். ஐயையோ யாதுசொல்வேன். யாதுசொல்லியுமெ ன்ன. ஏழைசொல் அம்பலத்துக்கேறுமா!

சரீரம் அநித்தியமென்பதற்குப் பிரமாணம்.

சகலாகமபண்டிதர் என்னும் அருணந்திசிவாசாரியர்

அருளிச்செய்த சிவஞானசித்தியார்.

கருவினிலழிவதாயுங்கழிந்திடாதழிவதாயும்
பரிணமித்தழிவதாயும்பாலனையழிவதாயுந்
தருணனையழிவதாயுந்தானரைத்தழிவதாயு
முருவமேயழிவேயானாலுள்ளபோதேபாருய்ப.

மானுடப்பிறவி சிவபுண்ணியஞ்செய்வதற்கு.

மானுடப்பிறவிதானும்வகுத்ததுமனவாக்காயத்
தானிடத்தைந்துமாடுமரன்பணிக்காகவன்றோ
வானிடத்தவருமண்மேல்வந்தரன்றனையர்ச்சிப்ப
ரூனெடுத்துழலுமூமரொன்றையுமுணரரந்தோ,

சிவபெருமானது திருநாமத்தைப் பேசாதவராய்ச் சிவசாத்திரங்களைக் கற்றல் கேட்டல் சிந்தித்தல் பூசித்தல் முதலிய சிவபுண்ணியங்களைச் செய்யாத மானுடரிழிவு, சிவ

ஞானச்செல்வராகுந் திருநாவுக்கரசுநாயனுர் தேவாரத்தா லினிது விளங்குகின்றது.

திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் திறமொ ருகாற் பேசாராகி, லொருகாலுந் திருக்கோயில் சூழா ராகி லுண் பதன்முன் மலர்பறித்திட்டுண்ணு ராகி, லருநோய்கள் கெடவெ ண்ணீ றணியா ராகி லளியற்றூர் பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றூரே.

ஐயையோ சிவபுண்ணியஞ் செய்யாப் பாவம் ஆரை விடும், எத்தனைகோடி காகங்கள் ஒருங்குகூடி நின்று வாதி த்தபோதும் ஒரு கல்லின்முன்னே நிற்கவல்லனவா? இல் லையே. அவ்வாறுபோல எத்தனைகோடி பாவங்கள் ஒருங் குகூடிநின்று வாதித்தபோதும், ஒரு சிவபுண்ணியத்தின் முன் நிற்கவல்லனவா? சிறியேன் வாய்ப்பிறப்பு பெரியோர் சபைக்கு அங்கீகாரமாமோ நிரங்கீகாரமாகுமோ அறியேன். அதுநிற்க,

சிவனடியார்களுக்குத் திருவமுதூட்டிய சிவபுண் ணியச் செல்வராகும் இச் சிறுத்தொண்டநாயனூர்புராணத் தை அளவுகடந்த ஆசையோடு படித்தல் கேட்டல் சிந்தித் தல் செய்கின்ற அன்பர்களும் இதனை அச்சிட்டு வெளிப்படுத் தற்பொருட்டுப் பொருளுதவிசெய்த சிவபுண்ணிய சீலர்களா கிய சைவப்பிரபுக்களும் இம்மையிலே, சரீரசுகம் வியாதி யின்மை நன்மங்கலவாழ்வு நன்மக்கட்பேறு திரவியவளர்ச்சி முதலியவற்ரோடுகூடி இன்புற்று, மரணாந்தத்தில் பரமுத்தி பெற்றுய்யும்பொருட்டுத் திருக்கைலாயபதியாகுஞ் சிவபெரு மான் திருவருள்செய்வார் என்பதே எனது சித்தம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மகா சிவபுண்ணியத்தெளிவாகிய

# பெரியபுராணத்திற் சொல்லப்பட்ட

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

# சிறுத்தொண்டநாயனார் புராணம்.

---

### விநாயகர் வணக்கம்.

அன்ப ரிடர்களையு மானைமுகன் பாதமலர்
என்புருக யான்பணிவே னின்று

சித்தம்பெரிய சிறுத்தொண்டரெங்குளரோ
அன்புடையதொண்டர் வருவாரகத்தெழுந்தருளும்
ஆமொருவரில்லா மனைபுகுதோமம்மையேநாம்
இக்கணமேதொண்டர் வருவாரகத்தெழுந்தருளும்
எங்கிருக்கக்கடனுமில்லை யாத்தியின்கீழ்நாமிருப்போம்
உத்தமரேநீர்போகி னுய்யாரேயும்மடியார்
ஊணுக்குவந்தநா முண்டன்றிப்போவதில்லை
எங்குமொருதிருப்பெயரைக் கண்டிலமேயேந்திழையே
ஏகம்பர்போலொருவர் வந்தாரியன்மனையில்
ஐயோவவர்தம்மைக் கையகலவிட்டீரோ
ஒருவரில்லாமனைபுகுதோ மென்றாரேயுத்தமனார்
ஓடிநீர்செல்லு மவந்திருப்பாராத்தியின்கீழ்
ஔவியநெஞ்சத் தடியேனைக்காத்தருளீர்
அஃதாவுன்னைப்போ லன்புடையார்தாமுளரோ
கடும்பசிகொண்டெழுந்தருளி யிருந்தீரேகாரணமே
ஙகரம்போல்நாடெங்கும் நாமும்மைக்கேட்டிருப்போம்
சங்கரன்றன்வடிவுடையீர் சாலப்பசித்திருந்தீர்
ஞயமுடையதொண்டரே நாமுண்ணும்வகைகேளீர்
இடமுடையதிருவுளத்தா லெமக்கருளிச்செய்தாலோ

இ,ணங்குவீரோசொன்ன லிசையுமோதாமுமக்கு
தலத்திலுள்ளபொருளாகிற் றப்டாது நான்தருவேன்
நலந்திகழுந்தொண்டரே பசுப்படுக்கிலுண்போம்யாம்
பசுவிற்கிங்குறைவில்லைப் பாற்பசுநூறுயிரங்காண்
பண்ணிலுள்ளோரெல்லாம் பசுக்காணும்மாதவத்தீர்
இ,யங்குகின்றநரர்வடிவி லெவ்வடிவென்றுரைத்தாலோ
அ,ரவென்னவல்லனாமா யையாண்டுசேர்மதலை
இ,லக்கணங்களுடையனுமா யெழுத்தறியும்பிள்ளைமிகு
வஞ்சமற்றவொருகுடிக்கு மகனாவான்றனைத்தேடி
அ,ழகமருந்தாய்ப்பிடிக்க வறப்பவனுந்தந்தையுமாய்
இ,ளங்குழந்தைதன்னிறைச்சி யிவள்திருத்தலவேண்டுமென்றார்
அ,றன்பாலகன்கறியை ஆய்சமைக்கவேண்டுமென்றார்
அ,னந்தோஷமாதாவுக் குண்டாகிலாகாதென்றார்
கடிதாகவிப்பசிக்குக் கறிசமைக்கவேண்டுமென்றார்
காலமொருநாழிகையிற் கடிதோடிவாருமென்றார்
கிளைபெரியதொண்டரே கேளீரொருவசனம்
சீராறுமாசத்தொருநாட் கெழுமியுண்போம்
குறிக்கொண்டசித்திரையிற் கொள்பரணியைப்பசியிற்
கூறியவாறுண்டாகிற் குறித்துவைப்பீர் தப்பாது
கெடுந்தகைமையில்லாதீர் கிலேசமுற்றுலுண்பதில்லை
கேட்டீரோதொண்டர் கிரமமுறச்சொன்னதெல்லாம்
கைவருமோவாராதோ காலத்தாலுண்போம்யாம்
கொர்தலரேநான்றுன் குணக்கேடனேயடியேன்
கோட்பாடேயீதாகிற் கொடுங்கையானீர்வாரீர்
சத்தியமேயென்வசனந் தப்பாதுநாயகரே
சால்புடையீர்போய்ச் சமைத்தால்வருவோம்யாம்
சித்தந்தளர்ந்து திகைத்தார்சிறுத்தொண்டர்
சீராரும்வைரவனார் திருவுள்ளமழகியனார்
சுந்தரத்தோர்வைரவனார் சொன்னதற்குவேறுமுண்டோ
சூதாடுமென்முலையீர் சொன்னகறிகேட்டீரோ
செம்பவளவாயாய் சிறுமதலைவேண்டுமென்றார்
சேயனையபாலனுக்குத் சிறந்தவயதஞ்சுமென்றார்
சையமெனவுமெய்யெனவுந் தாமறியவேண்டுமென்றார்

சோர்பயிற்றுந்தந்தைதாய் துணிந்தறுக்கவேண்டுமென்றார்
சோர்வின்றிப்பிள்ளைக்கறி தாய்சமைக்கிற்றோஷமில்லைத்
தந்தையரிந்திடவே தாய்பிடிக்கவேண்டுமென்றார்
தாய்தந்தைமனஞ்சலிக்கிற் றாமுண்பதில்லையென்றார்
திருந்திழையீர்பிள்ளைகொள்ளச் செழுநிதியந்தந்தருள்வீர்
தீதிற்சிவனடியார் சிந்தைகொள்ளும்பேதமையென்
துன்பமற்றார்பிள்ளை தலை துணிந்தறுக்கத்தருவர்களோ
தூக்காதேதந்திடினுந் துணிந்ததவநமக்காமோ
தெளிந்தவர்தாந்தந்திடினுஞ் செய்தவமுநமக்காமோ
தேனார்மொழிமடவீர் சேதிப்பாடேதோதான்
தையல்நல்லீரிங்கிருக்கத் தக்கதொன்றைத்தருவர்களோ
தொல்லைநிதியகத்திருப்பத் தூரப்போயிரப்பர்களோ
தோராதவைரவனார் சொன்னதற்குவேறுமுண்டோ
நலங்குலவுஞ்சீராளன் றன்னையேநாமறுப்போம்
நாதற்கும்பசிபெரிது நாழிகையுஞ்சென்றதுவே
நித்திலம்போன்முறுவலரை நீர்போய்க்கொடுவாரீர்
நீர்தானிதற்கிசையீ ரென்றிருந்தேன்நேரிழையே
நுன்றன்மகன்றன்னை நொடிவரையிற்கொடுவாரீர்
நூலோதும்பாலகனார் நுண்ணறிவினாலுணர்ந்தார்
நெஞ்சாரக்கண்டகனை நிகழ்த்தினார்பள்ளியிலே
நேசமுள்ளசீராளா நீமகனேவாராயோ
நையும்வினைபோயகல நம்பிநகைசெய்தனனே
நொய்யமலர்ச்சேவடிக ளேவவந்தகாரியமென்
நோக்காதேபிள்ளைமுகம் பாராதேநொய்தினென்றார்
பள்ளிக்குவந்ன தயர் பரிந்தழைக்கக்காரியமென்
பாலகனேயுன்மாமன் பணிகாரங்கொடுவந்தார்
பிரியமதாய்க்கொடுவந்த பணிகாரம்பேர்சொல்லி
பீடுடையமாங்கனியும் பெருங்கதலிநறுங்கனியும்
புண்ணியஞ்சேர்புத்தகமும் பொன்னினெழுத்தாணிகளும்
பூங்கொடியாள்பெற்றெடுத்த புண்ணியனேவாராயோ
பெண்ணேபுதல்வன்வந்தான் பேரமிர்தமூட்டுமென்றார்
போகப்பெற்றெடுத்த பிள்ளைநீவாராயோ
பைந்தொடியாள்பாலனுக்குப் பரிந்தமிர்தமூட்டினனே

பொன்னின்றுகிலுடுத்திப் பொற்றெட்டிலேற்றினளே
போதமுறவேண்டுமென்று பொய்யுறக்கஞ்செய்தனரே
மதலைகிடந்துறங்குதுகாண் மாதவத்தீர்வாருமென்றூர்
மானனையார்பிடித்திருக்க மைந்தன்றலையறுக்கலுற்றூர்
மின்னனையார்பிடித்திருக்க விரும்பியவர்தலையறுத்தார்
மீனுரும்பெரும்பிறவி வேரறவேதலையறுத்தார்
மூற்பட்டதலையிறைச்சி மூளையுமங்கேகளைந்தார்
மூவாவுறுப்பெல்லா முகுண்முலையாள்சந்தனத்தாள்
மெல்லியசந்தனத்தாள் வேறேகறிசமைத்தாள்
மேதகையதொண்டரே விருந்தினரைக்கொடுவாரீர்
மைக்களனுந்தொண்டருமாய் வந்தார்மனையிடத்தே
மொய்த்தபெரும்பசியுடனே முசிப்பிரிந்தும்விட்டீரோ
மோகமற்றதொண்டரே முசிப்புநமக்குண்டாமோ
வைரவருந்தொண்டருமாய் வந்தார்மனையிடத்தே
வார்குழலிநீர்போய் மலர்த்தாள்விளக்குமென்றூர்
விருந்தினர்தந்தாள்விளக்க மெல்லிநல்லாள்நீர்வார்த்தாள்
வீறுடையவைரவனுர் விருந்தமுதுக்கிருந்தனரே
உரிமையுள்ளபரிகலத்தி லுவந்துபடையுமென்றூர்
ஊக்கமுள்ளகறிகளெல்லா மொருக்காலேபடையுமென்றூர்
வெய்யகறியல்லாமல் வேறுகறிகண்டிலமே
வேதியரேயென்னகறி வெஃகினீர்பேசுமென்றூர்
வைத்ததலையிறைச்சி வரவொன்றுங்கண்டிலமே
ஒத்ததலைமயிர்படுமென் றெண்ணுதலாடான்களைந்தாள்
ஓராதேபிழைசெய்தீ ருண்பதுநாமில்லையென்றூர்
அந்தமொழிகேட்டே யகத்திருந்தசந்தனத்தாள்
ஆக்கிவைத்ததலையிறைச்சி யவள்கொடுவந்தேபடைத்தாள்
இன்றுமுதற்சந்தனத்தா ளெமக்குதவியாயிருந்தாள்
ஈனமற்றபரம்பரனே யினியுண்ணலாகாதோ
உடனுண்ணவொருதிருப்பே ருண்டாகினுமென்றூர்
ஊரெங்குந்தேடி யொருவரையுங்கண்டிலமே
என்போல்வார்தம்மோ டிருந்துண்ணலாகாதோ
ஏதுமொருகுறையில்லை யிருந்துண்ணீரெம்முடனே
ஐயப்படாமலவர்திரட்டி யுண்ணநின்றூர்

ஒக்கவலோவுண்போகா மும்மிலுமோபசிபெரிது
ஓதுமறைவேதியரே யுற்றபெருநற்றவத்திர்
ஔவியமொன்றில்லா மகனையழைத்துண்ணுமென்றார்
அஃகாதவன்புடையீர் மகனையழைத்துண்பதற்குக்
கல்விக்குப்பள்ளியிலே காலமேசென்றான்காண்
அ,ங்ஙனேசென்றவனை யழைத்துண்ணக்கொடுவாரீர்
சங்கரனார்பிள்ளை தனையழைக்கச்சொன்னார்காண்
ஐயமுடையகண்மணியே நன்மகனேவாராயோ
இ,டமுடையசீராளா வினிமகனேவாராயோ
இ,ணங்குழலைசுரந்ததடா வினியோடிவாராயோ

## அறுசீர்விருத்தம்.

கண்டிற் சொல்லுங் கனிவாயுங் காதுங் கழுத்துங் கண்மலரும்
உண்டற் கரியதுக ளிறைச்சி யுகந்து படைத்தே னோதே
அண்டற் கரிய பிரானார்வந் துண்ணா தண்ணாந் திருக்கின்றார்
தண்டைக் காலா சீராளா தரியா தோடி வாராயோ

அறுத்த கத்தி யுலருமுன்ன மாக்குஞ் சட்டி கறிபாதி
கறுத்த கண்டர் பரிகலத்திற் கரித்துப் பொரித்த கறியிருக்க
வுறுப்பி லொன்றுங் குறையா துன்னை மகனே யழைக்கின்றேன்
வெறுத்துப் போன சீராளா விரைவா யோடி வாராயோ

அள்ளிக்கொண்டேன்மிகப்பிடித்தே னங்கையழுக்கியறுத்தேன்யா
கள்ளியடியேன்பெற்றெடுத்த காதன்மகனேகண்பாராய் [ன்
வெள்ளிமலையிலிருந்துவந்த விருந்தர்பசியோடிருக்கின்றார்
தெள்ளிவடித்தசீராளா தேனேயோடிவாராயோ.

தண்டையுங்காலுஞ் சதங்கையுமாய்வந்தனரே
நம்பிவருமளவி னாதனார்போய்மறைந்தார்
பத்தியுள்ளசிறுத்தொண்டர் பரிதபிக்கத்தொடங்கினரே
மறைந்தனர்தான்மங்கையுடன் வானுலகிற்றோன்றினரே
இ,யக்கர்முதலாக வியாவரும்வந்திறைஞ்சினரே
அ,ரகரவென்றெல்லோரு மடிபோற்றிநின்றனரே
இ,லங்குபுகழ்ச்சிறுத்தொண்டர்க் கீசபதமீய்ந்தனரே
வஞ்சமற்றமனைவியர்க்கு மாதுமையாள்பதங்கொடுத்தாள்

அ,ழகமருஞ்சீராளர்க் கறுமுகனார்பதங்கொடுத்தார்
இ,ளமுலையசந்தனத்தாட் கெப்பதமுமீய்ந்தனரே
அ,ரமுடையதிருச்கைலை போய்வீற்றமர்ந்தனரே
அ,னவரதஞ்சிவானந்தத் தருள்வாழ்வுற்றிளைத்தனரே.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறுத்தொண்டநாயனார் புராணம்.

மகா புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலுள்ள பலநாடுகளுள், வடக்கே திருவேங்கடமும் தெற்கே கன்னியாகுமரியும் கிழக்கே கடலும் மேற்கே குடகநாடும் எல்லையாகவுடைய தமிழ்நாட்டின்கண்ணே; சையகிரியினின்றுந் தோன்றிப் பெருகுகின்ற காவேரிநதியை உடையதும், மிகச் சிறந்து விளங்குகின்றதும் ஆகிய சோழநாட்டிலே, சிவபெருமான் கோயில்கொண்டருளிய திவ்வியதானமாகும் திருச்செங்காட்டங்குடியிலே, மகாமாத்திர பிராமணகுலத்திலே, உத்தமவேள்விமானாகும் பரஞ்சோதியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆயுள்வேதங்களிலும் குதிரையேற்றம் யானையேற்றம் படைக்கலத்தொழில் என்பனவற்றிலும் அதிசமத்தராயுள்ளவர். வேதாகம முதலிய பதிசாத்திரங்களுள் உறுதிப்பொருளை அறிதல்வேண்டும் என்னும் விருப்பினோடு திருவருளைமுற்கொண்டு கற்றறிந்தமையால்; அவரது சித்தத்திலே, பிரமவிஷ்ணுமுதலிய தேவர்களெல்லாரும், காமம் வெகுளி மயக்கம் என்பனவற்றைத் துடைக்கமாட்டாமையின் பிறந்து இறந்து சுழலுகின்ற ஆன்மாக்கள் என்றும், பிறப்பும் இறப்பும் அளவும் உவமையும் விருப்பும் வெறுப்பும் ஆகியவற்றை இயல்பாகவே நீங்கி நிற்கின்ற சர்வான்ம பரமபதி, பரமசிவனே என்றுந் துணிந்து; ஆன்மாவாகிய ஆலயத்தினுள்ளே எள்ளினுளெண்ணெய்போல, நீக்கமறநிற்கின்றவரும், ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களைப் பக்குவமறிந்து, சங்கரிக்கின்ற அரனென்னுந் திருநாமமும் அவருக்கே உண்டு என்றும்,

அச் சிவபெருமானுடைய திருவடிகளை அடைதலே முத்திக்குவழியென்றும், நன்றாகக்கடைப்பிடித்து, அவருடைய திருவடிகளை அல்லும் பகலும் அன்பினோடு தியானிப்பவராயினார்.

சிவாலயங்களையும் சிவனடியார்களையும் சிவபெருமானெனப் பாவித்தும் பயபத்தியுடனே சேவிக்கின்றவரும், திருநீறு உருத்திராக்ஷம் என்னும் சிவசாதனங்களைப்பூண்ட சிவனடியார்களுடைய திருவடிகளைப் பரலோகசாதனம் எனக்கொண்டு, அச்சிவனடியார்களுக்கு எக்காலமுந் திருத்தொண்டு செய்பவருமாயுள்ளவர்.

அவர் சோழமகாராசனிடத்திலே அனுக்கராகி, அவ்வரசன்பொருட்டு யானைசெலுத்திக்கொண்டு சென்று, அவனோடு பகைகொண்ட பலவரசர்களை வென்று, அவர்கள் தேசங்களைக்கைப்பற்றி அவ்வரசனால் விசேஷமாக நன்குமதிக்கப்பட்டவர். ஒருமுறை உத்தரதேசத்திலே வாதாவியென்னும் நகரத்திற் சென்று, அதனைவென்று, பலவித இரத்தினங்களும் திரவியக்குவைகளும் யானை குதிரை என்பனவற்றையும் அரசனுக்குமுன் கொண்டுவந்தார், அதுகண்டு, அரசன் அவருடைய யானையேற்றத் திறமையை அதிசயித்துப்புகழ்ந்து பலமுறைபேச; அவ்வுத்தம வேள்விமானரும் பரஞ்சோதியாரை அறிந்த மந்திரிகள், அரசனைப்பார்த்து "மகாராஜாவே பரமசிவனுக்குத் திருத்தொண்டுசெய்வதில் இவ்வுலகத்திலே இவருக்குச் சமமாவார் ஒருவரும் இல்லை" என்றார்கள். அதைக்கேட்ட அரசன் நடுநடுங்கி, கண்களினின்றுஞ் சோகபாஷ்பஞ் சொரிய "இவர் நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை அறியாது கொடிய போர்முனையிலே விட்டிருந்தேன். ஐயையோ! இது எவ்வளவு கொடியபாவம்" என்று சொல்லிப், பின்பு பரஞ்சோதியாரைப் பார்த்து, "சுவாமி, இக்குற்றத்தைப் பொறுத்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்

கஞ்செய்தான். அப்பரஞ்சோதியார் அரசன் தம்மை வணங்குதற்குமுன் தாமவரை வணங்கி, "மகாராஜாவே நான் எனது உரிமைத்தொழிற்கு அடுத்த திறத்தைச் செய்வேன். அதனாலே என்ன பாவம்" என்றார். அப்பொழுது அரசன் அவருக்கு நிறைந்த திரவியங்களையும் விருதுகளையுங்கொடுத்து, "நீர் உம்முடைய நிலைமையை நான் அறியாவண்ணம் நடத்திக்கொண்டு வந்தீர். இனி என்மனக்கருத்திற் கிசைந்து, எனக்கு ஊழியஞ்செய்தலை ஒழிந்து, நீர் திருவுள்ளத்தில் விரும்பியபடியே பரமசிவனுக்கும் சிவனடியார்களுக்கும் வெளிப்படத் திருத்தொண்டுசெய்யும்" என்று விடை கொடுத்தான். பரஞ்சோதியார் விடைபெற்றுக்கொண்டு, தம்முடைய திருப்பதியாகுந் திருச்செங்காட்டங்குடியிற் சென்று, கணபதீச்சரத்திற் கோயில்கொண்டருளிய சர்வாதார வரதராகும் பரமசிவனைக் கைநொடிப்பொழுதும் மறவாது தியானித்து வணங்கி, அக்கணபதீச்சரருக்குத் திருத்தொண்டு செய்வாராயினர். சிவபத்தி இரக்கம் தவம் அறிவு முதலியனவெல்லாம் திரண்டொரு வடிவெடுத்தாற்போன்ற உயர்வொப்பில்லாத கற்புநிலையாற் சிறந்த திருவெண்காட்டு நங்கையார் என்னும் மங்கையாரை விவாகஞ்செய்து, அவரோடுகூடி இல்லறம் வழுவாது நடாத்தித், தினந்தோறும் முன்னே சிவனடியார்களைத் திருவமுதுசெய்வித்துப், பின்பு தாமுண்பார். சிவபெருமான் சராசரமென்னும் எல்லா ஆன்மாக்களிடத்தும் வியாபித்து, நிற்பரென்று துணிந்து, யாதோருயிர்க்கும் வாதைசெய்யாமல், எல்லாவுயிர்களினும் அன்புடையருமாயினர். சிவனடியார்களை நிஷ்களங்கபத்தியுடனே சேவித்து, அவர்கள் திருமுன்பு மிகச்சிறியராய் ஒழுகுகின்றமையால், அவருக்குச் சிறுத்தொண்டர் என்னுங் காரணப்பெயர் கிடைத்தது. விநாயகக்கடவுள் பூசித்த கணபதீச்சுரருடைய பெருங்கருணையினாலே, அவருக்குக்கற்பிலே சிறந்த தருமபத்தினியாகும் வெண்காட்டுநங்கையாரது அருமைத்திருவயிற்றிலே சீராளதேவரென்னும் ஒருபுத்திரப்

றந்தார். தங்கள் பாசக்கட்டை அறுக்கும் பொருட்டு, அவ தரித்த அப்புதல்வர் கிடைத்த பெருமகிழ்ச்சியினாலே சிவன டியார்களுக்கு அளவிறந்த திரவியங்களையுங்கொடுத்து, தங் கள் மரபிற்குரிய சட்டங்களையுஞ்செய்து, அச் சீராளனென் னுந் திருப்புதல்வரைப் பேய் பூதம் அவுணர் இராக்கதர் முதலியோர் தீண்டாவண்ணம், காவற்கடவுளாகிய விஷ்ணு மூர்த்தி திருக்கையிலே தரித்திருக்கின்ற சக்கரம் சங்கு வாள் தண்டு கோதண்டம் என்பவற்றைப் பொறிக்கப்பெற்ற பஞ் சாயுதமென்னும் ஆபரணத்தைத் திருக்கழுத்திலும் காப் பைத் திருக்கரங்களிலும் அரைஞாண்மணியைத் திருவரை யினிடத்தும் அணிந்தார்கள். பின்பு அச் சீராளதேவருக் கு ஐந்துவயசு நிரம்பியபருவத்திலே, வித்தியாரம்பஞ் செய் வித்தார். அந்நாளிலே அத் திருச்செங்காட்டங்குடியென் னுந் திருப்பதிக்கு எழுந்தருளிவந்த, திருஞானசம்பந்தப் பிள்ளையாரை எதிர்கொண்டு, அழைத்து அவரை வணங்கி, உயர்த்திப் புகழ்ந்து, துதித்து, அவராலே திருப்பதிகத் திலே குண மகிமைகளைபமைத்துப் பாடியருளப்பட்டார். ஊரும் பேரும் வடிவும் இல்லாதவராயினும், ஆன்மாக்களு க்குப் பாவ புண்ணிய வயத்தினாலே கிடைத்த, ஊரும் பே ரும் வடிவும் என்பனவற்றை, இருவினை ஒப்பாகிய பருவ காலத்திலே நீக்கி யாதரிக்கும் பொருட்டுத், திருவருள்வயத் தினாலே ஊரையும் பேரையும் வடிவையும் கொண்டருளுகி ன்ற, சர்வாதாரபதியாகிய பரமசிவன், திருத்தொண்டநாய னாருடைய மாசற்ற உண்மையாகிய அன்பை நுகர்ந்தருளு தற்கும், மெய்யடியார்கள் விரித்த பத்தியாகிய வலையிலே தாம் அகப்பட்டு அவரையாதரிப்போம் என்னும் உண்மை யை வெளிப்படுத்தற்பொருட்டும், திருவுளங்கொண்டு, கரிய மேகமானது இருண்டு சுருளாகவளைந்து குவிந்தாற்போல, கூட்டி முடிக்கப்பெற்ற சுருண்டு செடிவிழுந்த திருச்சடை யானது சிரசினிடத்தே விளங்கவும், அக்கரிய திருச்சடை யிலே செருகியவெண்மையாகிய தும்பைப்பூ இடையிடையே

கிடந்து விளங்கவும், திருநெற்றியிலே விபூதிப்பொட்டுப்பி றைவடிவாக விளங்கவும், திருச்செவியிலே மாணிக்கரத்தி னம் பதித்த சங்கக்குண்டலத்தின் நடுவே செவ்வரத்தம் பூவாலாகிய திருத்தோடும் ஆலாகலமென்னும் நஞ்சையடக் கிய திருக்கழுத்திலே பாற்கடற்குமிழிகள்போல வெண்மை யாகிய பளிங்குமாலை கிடந்து விளங்கவும், பவளம்போலுந் திருமேனியிலே நீலநிறச்சட்டையும் ஆணவம் மாயை கன் மம் என்னும் மும்மலங்களையும் நாசம்பண்ணுகின்ற பிரமகபாலந்தாங்கிய இடது திருக்கையாலணைத்த பரஞானவடிவா கிய திருச்சூலப்படையும் திருப்புயத்திலே கிடந்து விளங்க வும், வலது திருக்கையிலே உடுக்குப்பறை கிடந்து முழங்க வும், மெய்யடியார்களது அன்பானது திருமார்பிலே விளை ந்து பூத்து விரிந்தாற்போல அக்குமணியாலாகிய சன்னவீ ரம் பதக்கம் முதலியன கிடந்து விளங்கவும், மெய்யன்பர்க ளைப் பாதுகாக்கும்பொருட்டு, நிலவுலகத்தின் கண்ணே சிவ பெருமான் பெருங்கருணையினல் வந்து திருவருள்செய்வா ரென்று வேதசிவாகமங்கள் சுற்றிக்கிடந்து முறையிடுகின் றாற்போல, எட்டுத்திக்குகளும் செவிடுபடும்படி திருவடிக ளிலே சிலம்பு கிடந்து முழங்கவும், கருணை ஒழுகுகின்ற திருமுகத்திலே புன்சிரிப்பாகிய நிலவு உதிப்பவும், முறுகிய பத்தியுடனே தியானிக்கின்ற அன்பர்களது மனசும் உடம் புங் கரைந்து, நெக்குநெக்குருகிப் பெருகவும், பாவியேனது இருதயமாகிய வைரக்கல்லின்மேல் இடையறுது உலாவுகி ன்ற அருமைத்திருவடிகள் புழுதிதோயும்படி உட்சமயங் கள் ஆறனுள் ஒன்ருகிய வைரவமார்க்கத்திற்குரிய திருவே டங்கொண்டு, திருக்கைலாசத்தினின்றும் நீங்கித், திருச்செ ங்காட்டங்குடியை அடைந்து, சகித்தற்கரிய பசியுடையா ரைப்போல வழியிலே நின்றவர்களைப் பார்த்து, சிறுத்தொ ண்டரது வீடு எங்ஙனமென்று வினவிச் சீக்கிரம்போய் சிறுத்தொண்டநாயனருடைய வீட்டுவாயிலில் நின்று, சிவ னடியார்களுக்குத் திருவமுதூட்டுகின்ற சிறுத்தொண்டர்

இங்ஙனம் இருக்கின்றீரோ என்று வினவ, உள்ளே இருந்த தாதியாராகும் சந்தனநங்கையார் முன்வந்து, திருவடிகளி லேவணக்கஞ்செய்து, "சுவாமி, அவர் சிவனடியார்களைத் தேடிப் புறத்தே போய்விட்டார். இப்பொழுது சீக்கிரம் வருவார். தேவரீர் உள்ளே எழுந்தருளும்" என்றார் அதற்கு வைரவர் "ஆண்மகனில்லாத வீட்டில் நாம் தனியே பிரவேசியோம்" என்று, திருவாய்மலர்ந்தருள, அதுகேட்ட திருவெண்காட்டுநங்கையார் மனங்கலங்கி, இவ்வடியவர் போய்விடுவார்போலும் என்று பயந்து, விரைவாக வந்து, "சுவாமீ அடியேனுடைய நாயகர் எப்பொழுதும் சிவனடியாரைத் திருவமுது செய்விப்பவர், இன்றைக்கு ஒருவரையும் வரக் காணுமையால் தேடிப் புறத்தேபோய் இருக்கின்றார். தேவரீருடைய திருவேடத்தைக் காண்பாராயின் அளவுகடந்த மகிழ்ச்சி அடைவார், இனித் தரிக்கமாட்டார். இதோ வருவார். உள்ளே எழுந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து விண்ணப்பஞ்செய்தார். தம்மை வழிபடா நின்ற தொண்டர்களுடைய துன்பத்தை நீக்கி, அநுக்கிரகஞ் செய்கின்ற தயாசமுத்திரமான வைரவர், நாம் உத்தரதேசத்துள்ளோம். சிறுத்தொண்டரைக் காணும் பொருட்டு வந்தோம். எப்படியும் அவர் இல்லாதபோது நாம் இங்ஙனந் தங்குவது நீதியாகாது, கணபதீச்சுரத்திலுள்ள திருவாத்தி மரத்தின்கீழ் இருக்கின்றோம், அவர் வந்தமாத்திரத்தே அவருக்கு நாம் எழுந்தருளியிருக்குஞ் செயலைத் தெரிவியுங்கள் என்று சொல்ல, திருவெண்காட்டு நங்கையார் சுவாமீ, நீர் இங்ஙனந் தங்காது போனல் என்கணவர் பிராணசேதம் பண்ணுவார் என்றார். வைரவர், திருவமுதுக்கு வந்த நாம் அமுது செய்யாமற்போவேமோ என்று சொல்லித் திருவாத்திமரத்தை அடைந்து. அதன்கீழ் வீற்றிருந்தருளினர். பின்பு சிறுத்தொண்டநாயனர், சிவனடியார் யாதொருவரையுங் காணுது திரும்பி வீட்டுக்குவந்து, சிவனடியாரொருவரையுங் காணவில்லையே என்று, மனைவியாருக்குச்சொல்லித்

துன்புற்றார். மனைவியார் உத்தரதேசவாசியாகிய ஒரு வை ரவர் இங்கே வந்தார். நீர் வருமளவரைக்கும் இங்கே எழுந் தருளியிருக்கும்படி பிரார்த்தித்துச் சொல்லக் கேளாது, கணபதீச்சரத்திலுள்ள திருவாத்திமரத்தின்கீழ்ப்போய் இரு க்கின்றார் என்றார். அதுகேட்ட சிறுத்தொண்டநாயனார், ஐயகோ அவ்வயிரவரைத் தடுக்காது விட்டீரோ என்று துக்கித்து நிற்க, மனைவியார் விரைவிலே ஓட்டெடுத்துப்போ னால் திருவாத்தியின் கீழ் அவ்வயிரவரைக் காணலாம் என் றார். சிறுத்தொண்டநாயனார் மிகுவிருப்பத்துடனே விரை ந்துபோய், அவ்வைரவரைக் கண்டு, வணக்கஞ்செய்து நிற்க, வைரவர் பெரிய சிறுத்தொண்டர் நீரோ என்று, திருவாய் மலர்ந்தருளினார். சிறுத்தொண்டநாயனார் அவரை வண ங்கி, "சுவாமீ, சிவசாதனங்களையுடைய அடியார்கள் திரு முன்பு நின்று, வணங்குதற்குத் தகுதியற்றவனாயினும் சிவ னடியார்கள் பாவியேன் ஈடேறும் பொருட்டுப் பெருங்கரு ணையினாலே அடியேனை அப்படி அருளிச் செய்வார்கள்" என்றார். அதுநிற்க, இன்றைக்குத் திருவமுது செய்தற்குச் சிவனடியார் ஒருவரையுந் தேடியுங்கண்டிலேன். அடியேன் செய்த புண்ணிய மேலீட்டினாலே தேவரீரைப் பசியோடி ருக்கக்கண்டேன். தேவரீர் அடியேன்வீட்டுக்கு எழுந்த ருளிவந்து, திருவமுதுசெய்தல்வேண்டும் என்று விண்ணப் பஞ்செய்தார். வைரவர் அன்பரே நாம் உத்தரதேசத்தி லுள்ளேம். உம்மைக்காணும்பொருட்டு வந்தோம், நம்மை அமுதுசெய்வித்தல் எம்மால் இயலாது, அது மிகவருமை என்றார். சிறுத்தொண்டநாயனார், தேவரீர் திருவமுது செய்தருளும் இயல்பை அருளிச்செய்தால் சீக்கிரம் பாகம் பண்ணுவிப்பேன், சிவனடியார்கள் தலைப்பட்டால் அரியன வும் எளியனவாம் என்று விண்ணப்பஞ்செய்ய; வைரவர் "நாம் ஆறுமாசத்துக்கு ஒருமுறை பசுவைக்கொன்று உண் போம், அதற்குரியநாளும் இந்தநாளேயாம், அப்படி உண் பித்தல் உம்மால் இயலாது" என்றார். சிறுத்தொண்டநாய

ஞர், மிகநன்று அடியேனிடர் பசுக்களோ குறைவில்லை, நூறுயிரக்கணக்கான பாற்பசுக்களும் உண்டு, தேவரீருக்குப் பிரீதியான பசு இன்னதென்று அருளிச்செய்வீராயின், அடியேன் விரைந்து சென்று, பாகம்பண்ணுவித்துக் காலந் தாழ்க்காமல் வருவேன் என்று சொல்ல; வைரவர் நாம் உண்பது நரபசு அது "சிவா" என்று, சொல்லப்பயின்றதாயும், ஐந்து வயசினை உடையதாயும், அவையவப் பழுதில்லாததாயும், கல்வி கற்றதாயும், ஒருகுடிக்குத்தான் ஒன்றேயாயும் இருத்தல்வேண்டும். அவ்விலக்கணங்களை உடைய சிறுவனை மனக்கவலை இல்லாமல் தாய் பிடிக்கத் தந்தை அரிதல்வேண்டும். இப்படிச் சமைக்கப்பட்ட கறியை சித்திரைமாசப்பரணி ஐப்பசிமாசப் பரணி என்னும் இருதினங்களிலே வருஷமிருமுறை நாம் வாயில் இட்டு, உண்போம். இப்படிச்செய்ய இசைனுமாயின், வாக்குத்தத்தம்பண்ணிக் கொடுவென்று கேட்ப; சிறுத்தொண்டநாயனர் தேவரீர் திருவமுதுசெய்வீராயின் அடியேனுக்கு இதுவும் அரிதன்று என்றுசொல்லி, அவ்வைரவரைச் சேவித்து விடைபெற்று, வீட்டுக்குப் போயினர். அப்பொழுது மிக்க அன்பை உடைய கற்பு நிலையாற் சிறந்த உத்தம மனைவியாராகும் திருவெண்காட்டு நங்கையார் சிறுத்தொண்டநாயனரது வரவைப் பார்த்து, முன்பு நின்று, வணங்கி, அவரதுமலர்ந்த முகத்தைப் பார்த்து, அடியாருடைய செயலைவினவ; அவர், மனைவியாரைப்பார்த்து, ஒருகுடிக்கு ஒருவனுகும் ஐந்து வயசினை உடையவனுமாய் அவயவப்பழுதற்றவனுய்ச் சிவா என்று சொல்லப் பயின்றவனுமாயுள்ள ஒரு சிறுவனைக் கவலை இல்லாமற் பெற்றதாயார் பிடிக்கத் தந்தையார் அரிந்து சமைத்தால், திருவமுது செய்வோம் என்று, உடன்பட்டருளினர் என்றார். அப்பொழுது மனைவியார் அவ்வடியவர் விரும்பியபடி திருவமுது செய்யும்பொருட்டு, ஒருகுடிக்கு ஒருவனுகுஞ் சிறுவனைப் பெறுவது எப்படியென்று சொல்ல, சிறுத்தொண்டநாயனர், என்பிராணநாயகியே, இத்திறத்

துச் சிறுவனை வேண்டிய திரவியங்களைக் கொடுத்தால் தருவார் உளராயினும், நேர்நின்று அரியத்துணியும் பிதா மாதாவாயினோர் தங்கள்மனசு ஒருநெறிப்பட்டு, உடன்படுவாரோ என்றார். மனைவியார், பிதாமாதா அங்ஙனம் உடன்பட்டபோதும், புண்ணியம் நமக்காகமாட்டாதே என்றார். பின்பு சிறுத்தொண்டநாயனார் மனைவியாரது முகத்தைப் பார்த்து, நாம் ஈடேறும்பொருட்டு நீர் பெற்ற சீராளனை அழைத்து, அறுப்பதே நியாயமாகும் என்றார். இப்படிக் கணவர்சொல்ல; மனைவியார் அதற்குடன்பட்டு, காலந்தாழ்க்காது எங்கள் குலத்தை விளங்கச்செய்து நம்மைப் பாதுகாக்கும்படி நான்பெற்ற மாணிக்கத்தைப் பள்ளிக்கூடத்தினின்றும் சீக்கிரம் அழைத்துக்கொண்டு வாரும் என்றார். சிறுத்தொண்டநாயனார் பிறவித்துன்பத்தினின்றும் நீங்கிச், சிவானந்தப் பெருவாழ்வைப் பெற்றாற்போலப் பேரானந்தங்கொண்டு, பள்ளிக்கூடத்துக்கு விரைந்து செல்லும்பொழுது, சீராளதேவர் தாயார் தந்தையார் என்னும் இருவரும் யோசித்த கருத்தைச் சொப்பனத்திலே ஒருவிதமாக அறிந்து, பள்ளிக்கூடத்து உள்ளவர்களுக்குத் தெரிவித்தார். அது நிற்க. சிறுத்தொண்டநாயனார் அங்ஙனஞ்சென்று "என்மகனே சீராளா என்னுடனே வா என்றார்." அது கேட்ட சீராளதேவர் சிறுநகைசெய்து, அருந்தவம் இருந்துபெற்ற என் பிதாவே, பள்ளிக்கூடத்தில் வந்து, அழைப்பதற்குக் காரணம் யாது என்று வினவ, என்மகனே, உன்மாமனார் பழவருக்கம் பணிகாரம் புத்தகம் எழுத்தாணி முதலியன கொண்டுவந்து, உன்னைக்காணும் பொருட்டு, அழைத்துவரச்சொன்னார் என்றுசொல்லிச் சீராளதேவரை எடுத்து, முத்தமிட்டுத் தோண்மேலே வைத்துக்கொண்டு, வீட்டுக்குத்திரும்பி வந்தார். மனைவியாராகும் வெண்காட்டுநங்கையார் எதிர்வந்து, தமது திருப்புதல்வரை வாங்கிக் குடுமி திருத்தி முகந்துடைத்துத் திருமுழுக்காட்டி, அமுதுசெய்வித்து தொட்டிலின் மேலேற்றி ஊரார் அறியாவண்ணம்

பொய்யுறக்கம் வரச்செய்து, பின்பு மனைவியார் நாயகனை அழைத்து, புதல்வரை அவர்கையிற் கொடுத்தார். அதன் பின்பு தாயார் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு வந்தார். அப்பொழுது ஆயிரகோடி சீதேவிமாரின் அழகுகளெல்லாம் ஒருங்குகூடி ஒரு பெண்வடிவெடுத்து வலியவந்து, கட்டித் தழுவுகின்றபொழுதும், சிவபத்தியிற் சிறிதும் வழுவாத மனநிலையாற் சிறந்த தந்தையாராகுஞ் சிறுத்தொண்டநாய னர், தம்மைப்பந்தித்த, ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மலங்களையும் சின்னபின்னப்படுத்தித், திருக்கைலாசபதி யாகுஞ் சிவபெருமானது திருவடிகளாகும் பெருவாழ்வைக் கூட்டிவைக்கும்பொருட்டு, அவதரித்த சீராளதேவரை எடு த்து, அவருடைய தலையைப்பிடிக்க, தாயார் அப்புதல்வரு டைய சிறுசதங்கைமணி சத்தம்பண்ணுகின்ற இரண்டுகால் களையும் தம்முடைய மடியினுலே இடுக்கிக்கொண்டு, கைகள் இரண்டையும் தமது கைகளினுலே அமுக்கிப் பிடிக்கும்பொ ழுது, அச்சீராளதேவர் பிதாமாதா இருவரும் மிக என்மே ரில் மகிழ்கின்றனர் என்று, பெருமகிழ்ச்சிகொண்டு, சிறு நகைசெய்ய; சிவபத்தியே ஒரு வடிவெடுத்தாற்போன்ற தந் தையார் மனமகிழ்ச்சியுடனே ஆயுதத்தினுலே அரிதலாகிய அரியசெயலைச் செய்தார். சிறுத்தொண்டநாயனர் மனைவி யார் என்னும் இருவரும் சிவபெருமான்மேரிலே பதியும்ப டிவைத்த அளவிறந்த, முறுகிய பத்திமயக்கத்தினுலே; தம் புதல்வராகிய சீராளதேவர்மேரிற் பதிந்த அன்பு மயங்கியது; அது மங்கவே, அவர்களது அறிவுஞ் செயலும் அவர்கள்வ சமாகாது, நித்திரைசெய்தவன் கையிற்பொருள் அவனை அறியாது தானே நகருதல்போலப், பரவசப்பட்டன. சிறி யதெல்லாம் பெரியதில் அடங்கும் என்பதனுல் அறிக. இர ண்டு கண்களும் தம்முள்ளே மாறுபடாமல் ஒத்து ஒருபொ ருளைப் பார்த்தல்போலக், கணவனும் மனைவியுந்தம்முள்ளே மாறுபடாமல் ஒத்த மனமுடையார்களாகித் தாம்பெற்ற புதல் வரை மனமுவந்து, அரிந்தார்களாயின், இல்லறத்தின்கண்

ணைநின்று தாங்தொடங்கிய சிவபுண்ணியம் நடைபெறுதற்குத் தடையென்னை? இது விவேகிகள்யாவருஞ் சிந்திக்கத் தக்கது. அது நிற்க, பின்பு திருவெண்காட்டுநங்கையார் அறுத்ததலையிறைச்சி திருவமுதுக்கு உதவாது என்று, அதனைவிலக்கி மறைத்து நீக்கும்பொருட்டுச் சந்தனநங்கையார் கையிற் கோடுத்து, மற்றை உறுப்புகளின் இறைச்சி எல்லாவற்றையும் கொத்தி எடுத்து, அறுத்துப் பக்குவஞ்செய்து, கறிக்குவேண்டும் பலகாயங்களையும் அரைத்துக், கூட்டிச் சேர்த்து, அடுப்பிலேற்றி மனமகிழ்ச்சி உடனே பாகம்பண்ணிய கறியினது பருவம்பார்த்து, கீழே இறக்கி, வேறொரு பாத்திரத்திலே வாசனைப்பொருள் இட்டுத், தாளித்து வேறு கறிகளுஞ்சமைத்து, சோறுஞ்சமைத்துப், பின்பு கணவருக்குத்தெரிவித்தார். நாயகராகிய சிறுத்தொண்டநாயனார் முகின்முழக்கங்கேட்ட மயிலைப்போலப் பேரானந்தங்கொண்டு, அதிவிரைவாக ஓட்டெடுத்துத் திருவாத்திமரத்தின் கீழ் இருந்த; வைரவரை வணக்கஞ்செய்து "சுவாமீ தேவரீர் திருவுள்ளத்தில் விரும்பியபடியே சமையல் செய்வித்தேன். எழுந்தருளிவந்து திருவமுதுசெய்தல்வேண்டும்" என்று, விண்ணப்பஞ்செய்து, அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், ஆசனத்தில் இருத்தி, அவருடைய திருவடிகளை நீரினாலே விளக்கி, அந்தத்தீர்த்தத்தை தங்களது பாவம் நிவாரணமாகும்பொருட்டு, சிரசின்மேலே தெளித்து பின்னர் வீடெங்குந்தெளித்து, பூக்களினாலே அவரைப்பூசித்துத் தூபதீபங்காட்டி, வணங்கினார். பின்பு நாயகரும் மனைவியாரும் வைரவரைப் பார்த்துச், சுவாமீ திருவமுது படைக்கும்விதம் எப்படி என்று கேட்க, வைரவர் "அன்னத்துடனே கறிகளெல்லாம் ஒருங்கேபடைத்தல்வேண்டும்" என்றார். அதுகேட்ட திருவெண்காட்டுநங்கையார் பாத்திரஞ்சுத்திசெய்து, அன்னங் கறி என்பனவற்றைப் படைத்தார். தம்மைவழிபடாநின்ற, தொண்டர்களுடைய மும்மலங்களையும் வறுத்த வித்துப்போலத் திருவருட்பார்வையால்

தகித்து, நீறுக்குகின்ற பாசப்பகைவராகும் வைரவர், நாம் சொல்லியமுறையே கொன்ற பசுவினது அவயவங்கள் எல்லாவற்றையுஞ் சமயல்பண்ணினீரா என்று வினவ; வெண்காட்டுநங்கையார் தலையிறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு உதவாது என்று விலக்கிவிட்டோம் என்றார். வைரவர் அதுவும் நாம் அமுதுசெய்வது என்றார். அதுகேட்டுச் சிறுத்தொண்டநாயனாரும் மனைவியாரும் பிரமித்து, அறிவு மயங்கிநிற்க; தாதியாராகுஞ் சந்தனநங்கையார் அத்தலையிறைச்சியைத் தேவரீர் திருவமுதுசெய்யும்பொழுது நினைக்கவரும் என்று முன்னமே நான் சமையல்பண்ணி வைத்தேன் என்றுசொல்லி, அதனை எடுத்துக்கொடுக்க; திருவெண்காட்டு நங்கையார் முகமலர்ந்து வாங்கிப்படைத்தார். அதன்பின் வைரவர் சிறுத்தொண்டநாயனாரைப் பார்த்து "நாம் தனியே உண்ணேம். கூடவைத்து உண்பதற்குச் சிவனடியாரைக் கொண்டுவாரும்" என்று திருவாய்மலர்ந்தருள; சிறுத்தொண்டநாயனார் ஏங்கி, ஐயையோ! அடியவர் திருவமுதுசெய்தற்கு உள்ள தடை இதுவோ என்று, நினைந்து, வீட்டுக்குப்புறத்திலே போய், சிவனடியார் ஒருவரையும் காணாது முகம்வாடித் திரும்பிவந்து, வைரவரை வணங்கிச் "சுவாமீ! சிவனடியார் ஒருவரையுங்காணேன். அடியேனுந் திருநீறு தரிப்பவன் என்னைவைத்துத் திருவமுது செய்யும்" என்று விண்ணப்பஞ்செய்ய; வைரவர் சிறுத்தொண்டநாயனாரைப் பார்த்து உம்மைப்போலுந் திருநீற்றுச் செல்வர் உளரோ! நீர் என்னுடனே இருந்து, உண்ணும் என்று சொல்லிப், பின்பு திருவெண்காட்டுநங்கையாரைப் பார்த்து, இவருக்குவேறொரு பாத்திரந்திருத்தி, அன்னமும் இறைச்சியும் நமக்குப்படைத்ததில் எடுத்துப்படையுமென்று திருவாய்மலர்ந்தருள; அவரும் அப்படியே எடுத்துப்படைத்தார். சிறுத்தொண்டநாயனார் அவ்வைரவரை அமுதூட்ட விரும்பி, தாம் உண்ணும்படி தொடங்க; வைரவர் அவரைத் தடுத்தருளி, "ஆறுமாதகாலஞ் சென்றபின்பு ஒரு முறை

உண்ணுகின்ற நாம் உண்பதன்முன் நீர் உண்பது என்னமடமை! நம்முடன் கூட உண்பதற்குப் புத்திரன் உண்டேல் அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் "அவன் பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கிறான். இப்பொழுது இங்கே உதவான்" என்று சொல்ல, வைரவர் "அவன் வராவிடில் நாம் உண்பதில்லைத் தேடி விரைவாக அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் இவ் வைரவர் திருவமுதுசெய்தற்கு யாதுசெய்யத்தக்கது என்று, தரியாது எழுந்து, மனைவியாரோடும் வீட்டுக்குப்புறத்திலே போய்நின்று, என் மகனே சீராளா வா என்று அழைத்தார். மனைவியாரும் நாயகரது கட்டளையில் நிற்பாராகி "என் சீராளனே சிவனடியார் நாங்கள் உய்யும்பொருட்டு, உன்னை உடன்வைத்து உண்பதற்கு அழைக்கின்றார். என்மகனே வா எனது இரண்டுமுலைகளும் பால்சுரந்து, பெருகுகின்றது. என்மகனே அடியேன் பெற்ற விலையேற்றம் உள்ள மாணிக்கமே சீராளா சீக்கிரம் ஓட்டெடுத்து, வா" என்று பலவிதமாகச் சொல்லி, ஓலமிட்டு அழைக்கும்பொழுது, படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்துதொழில்களையும் இயற்றுகின்ற சர்வசாமர்த்தியராகிய பரமசிவனது திருவருளினாலே அச்சீராளதேவர் பள்ளிக்கூடத்தில் நின்றும் ஓடிவருபவர் போலத் தண்டைமுதலிய ஆபரணங்கள் காலிலேகிடந்து, ஒலிக்கும்படி சீக்கிரமாக ஓட்டெடுத்து, வந்தார். தாயார் அவரை எடுத்துத் தழுவி, உச்சிமோந்து, நாயகர் கையிற் கொடுக்க; அவர் இனிச் சிவனடியார் திருவமுது செய்யப் பெற்றோம் என்று, மனசு குதுகுலிப்புக்கொண்டு, அப்புதல்வரைக்கொண்டு, வைரவரைத் திருவமுது செய்வித்தற்கு உள்ளே வந்தார். அங்ஙனம் அவர் வருதற்குமுன் ஆன்மாக்களைச் சிருட்டித்து, அவரவர் கருமத்துக்கீடாகப் பலங்களைக் கொடுக்கின்ற; பரமபதியாகிய வைரவர் மறைந்தருள; சிறுத்தொண்டநாயனார் பசுவைக்காணாது கதறுகின்ற கன்றைப்போலக் கதறி அவ்வைரவரைக் காணாமையால் மனங்

கலங்கித் திகைத்துக் கீழே விழுந்தார். கலத்திலே இறைச்சிக் கறியமுதைக் காணமல் அச்சங்கொண்டார். வைரவர் பாவியேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனரோ என்று தேடிப் புறத்திலே செல்ல; அச்சிறுத்தொண்டநாயனர் செய்தது நிஷ்த்தானுட்டானமாயினும் அவர் சிவானந்தானுபவ மேற்கொண்டு நிற்கையால், கருவிகரணங்கள் தன்னறிவுச் சீவிப்பாய்நின்று செய்யாது, சிவபோதச் சீவிப்பாய் எழுந்து செய்தமைபற்றி, அதனை விகிதானுட்டானமாகவே கொண்டருளிய சிவபெருமான், பிரமா விஷ்ணு முதலிய தேவர்கள் பூதகணங்கள் முனிவர்கள் வித்தியாதரர் முதலாயினோர்கள் சுற்றும்படி உமையம்மையாரோடும் சரவணேற்பவராகிய சுப்பிரமணிய சுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே வெளிப்பட்டருளினர். சிறுத்தொண்டநாயனரும் திருவெண்காட்டு நங்கையாரும் சீராளதேவரும் சந்தனநங்கையாரும் ஆகிய நால்வரும் அவர்களைத் தரிசித்துப் பேரின்பக்கண்ணீர் குமிழிகொண்டு வடிய, எலும்பும் மனமும் நெருப்பை அடுத்த வெண்ணெய்போல நெக்குநெக்குருகப், பரவசப்பட்டவர்களாய், அடியற்ற மரம்போலக் கீழேவிழுந்தார்கள். பின்பு எழுந்து, நமஸ்கரித்து, சிரசின்மேல் ஏறக்குவிந்த கையையுடையர்களாகித் தோத்திரம்பண்ணினர்கள். பின்பு தன்னை அடைக்கலமாக அடைந்து தன்னடிமைத்தொழில் செய்பவர்களுக்கு வருந் துன்பத்தை நீக்கிப், பாதுகாத்து, அவர்களைப் பசுகரணமாய் நில்லாது தன்போலச் சிவகரணமாய், நிற்கும்பொருட்டுச் செய்கின்ற காருண்ணிய சொரூபியாகிய பரமசிவனும் பார்ப்பதிதேவியாரும் சரவணேற்பவராகிய சுப்பிரமணியசுவாமியும், அவர்கள் நால்வரையும் தங்களை எக்காலமும் பிரியாது வணங்கிப் பேரின்பத்தை அநுபவித்துக்கொண்டு, இருக்கும்பொருட்டு உடனே அழைத்துக்கொண்டு திருக்கைலாசத்தை அடைந்தார்கள்.

பலகற்பகாலமாக அதியுக்கிரமாகிய சூடுள்ள நெருப்பின்நடுவே நின்று, மனசை ஐம்புலன்வழியே செல்லவிடாது அறிவாகிய கருவியினாலே மடக்கிப் பனி காற்று பசி முதலிய வற்றால் உடம்புக்கு வருந்துன்பத்தைச் சகித்து அருந்தவம் இருந்தபோதும் கிட்டாத; பரமபதியாகிய கடவுள் ஒருநாளிலே ஒரு சிறுபொழுதிலே தம்முடைய திருவேடத்தைக் கண்டு, மிகப்பெரிய பத்திமிகுதியினாலே ஒரே புதல்வராகுஞ் சீராளதேவரை அறுத்துச் சமையல்செய்து, கறியமுதுபடைத்த; சிறுத்தொண்டநாயனார் திருவெண்காட்டு நங்கையார் என்னும் இவர்கள் எதிரே கன்றைத்தேடி அணைகின்ற தலையீற்றுப் பசுவைப்போல இடபாரூடராய், வெளிப்பட்டுத் திருவருள்செய்தார். இவற்றுள், திருவெண்காட்டு நங்கையார் சிறுத்தொண்டநாயனார் என்னும் இவர்களது பத்தியின் கடுமையைப் பெரிதென்கோ அல்லது கிருபாசமுத்திரமாகிய சிவபெருமான் அவர்கள்பேரில் வைத்த கைமாறற்ற, பெருங்கருணையின் கடுமையைப் பெரிதென்கோ, ஆயினும் இதனைக்காட்டினும் பெறத்தக்க ஊதியம் யாது. ஒருபெண் தன்குழந்தையைக் காணுமுன் இல்லாத முலைப்பாலும் கண்ணீரும் அக்குழந்தையைக் கண்டபொழுது அவளிடத்தே பெருகி வரக்காணுதல்போல, அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகராய், அருவமாய் நிற்கின்ற சிவபெருமான் மெய்யடியார்களது அன்பின் பெருக்கத்தைக்கண்டு, உருவுகொண்டு வெளிப்படுவர் என்பதற்குச் சந்தேகம் உண்டோ? இல்லையே. ஐயையோ இதனை விவேகிகள் யாவரும் சிந்திக்கக்கடவர்.

## பெரியபுராணம்.

அயன்கபாலந்தரித்தவிடத்திருக்கையாலணைத்த
வயங்கொளிமூவிலைச்சூலமணித்திருத்தோண்மிசைப்பொலியத்
தயங்குசுடர்வலத்திருக்கைத்தமருகத்தினொலிதழைப்பப்
பயன்றவத்தாற்பெறும்புலியும்பாதத்தாயனைசூட.

அருள்பொழியுந்திருமுகத்தினணிமுறுவனிலவெறிப்ப
மருள்பொழிமும்மலஞ்சிதைக்கும்வடிச்சூலம்வெயிலெறிப்பப்
பொருள்பொழியும்பெருகன்புதழைத்தோங்கிப்புவியேத்தத்
தெருள்பொழிவண்டமிழ்நாட்டுச்செங்காட்டங்குடிசேர்ந்தார்.

கொன்றைவேணியார்தாமும்பாகங்கொண்டகுலக்கொடியும்
வென்றிநெடுவேன்மைந்தருந்தம்விரைப்பூங்கமலச்சேவடிக்கீழ்
நின்றதொண்டர்மனைவியார்நீடுமகனர்தாதியார்
என்றும்பிரியாதேயிறைஞ்சியிருக்கவுடன்கொண்டேகினர்.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருத்தொண்டர் பெரியபுராணம் என்னும் நூல்கள் சிவபெருமானது திருவருளினாலே பாடப்பட்டமையால், அருட்பாக்கள் என்று பேசப்படும். இவ்வருட்பாக்கள்மிகப் பெரிய அழகும் பருவம் உள்ள ஒரு பெண் ஆடை ஆபரணம் முதலியவற்றோடு கூடிநின்று, காமுகருடைய மனசை மயக்கிக் கொள்ளைகொண்டு, தன்வசப்படுத்தல் போலச் சிவபத்தி அடியார்பத்தி நூலுணர்ச்சியு முடையர்களாகி, ஓதுகின்ற, மெய்யன்பர்களது மனசை நெகிழ்ந்து, உருகும்படி மயக்கிக் கொள்ளைகொண்டு, சிவபெருமான் வசப்படுத்திச் சிவஞானச் செல்வர்களாகத் தெருட்டுகின்ற, சிவநூல்களாகும். மதுபானம் மாமிசபோசனம் முதலியன இல்லாதவர்களால், உள்ள சைவர்கள் செய்கின்ற; சிவாலயசேவை மாகேசுரபூசை சிவலிங்கபூசை நித்திய அநுட்டானம் என்னும் சிவபுண்ணியங்களுக்கு இல்லாது நிரம்பாத பெருஞ் சிறப்பினவாயுள்ளன. அந்தச்சைவர்கள் இவ்வருட்பாக்களை நியமமந்திரங்களாகக்கொண்டு, விதிப்படி ஓதுவார்களாயின் அவர்களைப் பந்தித்த ஆணவம் மாயை கன்மம் என்னும் பாசக்கட்டைப் பிறைச்சந்திரன் இருளை ஓட்டி, ஒளியை விரிக்கின்ற வாறுபோல நசித்துச், சிவஞானமாகிய பேரொளியைப் பிறப்பித்துச் சிவானந்தப் பெருவாழ்வைக் காட்டிவைக்க வல்ல திறமையை உடையனவாகும். இஃது உண்மை.

## திருக்கேதீச்சரம்.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர்புறனுரைச்சமணாத
ரெத்தராகிநின்றுண்பவரியம்பியவேழைமைகேளேன்மின்
மத்தயானையைமறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதீச்சரமடைமின்னே.

மாடெலாமணமுரசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி

காடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலைப்
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே.

சுந்தரமூர்த்திநாயனார்.

சுடுவார்பொடிநீறுந்நலதுண்டப்பிறைக்கீளுங்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றிடமாயுறைகின்றான்றிருக்கேதீச்சரத்தானே.

கறையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருட்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டன்னுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே.

திருச்சிற்றம்பலம்.

---

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

திருக்காளத்தி. திருவிராகம் பண். சாதாரி.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடந்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவி
லேனமினமானினொடுகிள்ளைதினைகொள்ளவெழிலார்கவணினாற்
கானவர்தமாமகளிர்கனகமணியிலகுகாளத்திமலையே.

திரு இடைமருது. பண் தக்கராகம்.

ஓடேகலனுண்பதுமூரிடுபிச்சை
காடேயிடமாவதுகல்லாலினிழற்கீழ்
வாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந்
தீடாவுறைகின்றவிடைமருதீதோ.

திருமுல்லைவாயில். பண் பியந்தைக் காந்தாரம்.

துளிமண்டியுண்டுநிறம்வந்தகண்டனடமன்னுதுன்னுசுடரோன்
ஒளிமண்டியும்பருலகங்கடந்தவுமைபங்கனெங்களரனூர்
களிமண்டுசோலைகழனிக்கலந்தகமலங்கடங்குமதுவின்
றெளிமண்டியுண்டுசிறைவண்டுபாடுதிருமுல்லைவாயிலிதுவே.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்க
ணிடைகொள்வாரெமக்கிலையெழுகபோதுநெஞ்சமே

குடைகொள்வேந்தன்மூதாதைகுழகன்கோவலூர்தனுள்
விடையதேறுங்கொடியினன்வீரட்டானஞ்சேர்துமே.

---

திருநாவுக்கரசுநாயனார்.

திருவேகம்பம். மனத்துள்வைத்தபதிகம்.

பண் காந்தாரம்.

கரவாடும்வன்னெஞ்சர்க்கரியானைக்கரவார்பால்
விரவாடும்பெருமானைவிடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழவங்கையினிலனலேந்தி
யிரவாடும்பெருமானையென்மனத்தேவைத்தேனே.

பல்வகைத்திருத்தாண்டகம்.

நேர்ந்தொருத்திபொருபாகத்தடங்கக்கண்டுநிலைதளர வாயிரமாமுகத்தினோடு, பாய்ந்தொருத்திபடர்சடைமேற்பா யக்கண்டுபடவரவும்பனிமதியும்வைத்தசெல்வன், தாங்கிருத் தித்தம்மனத்தையொருக்காத் தொண்டர்தனித்தொருதண்டூ ன்றிமெய்தளராமுன்னம், பூந்துருத்திபூந்துருத்தியென்பீரா கிற்பொல்லாதபுலாற்றுருத்திபோக்கலாமே.

ஓம்பினேன்கூட்டைவாளாவுள்ளத்தோர்கொடுமைவைத்துக்
காம்பிலாமுழைபோலக்கருதித்தேமுகக்கமாட்டேன்
பாம்பின்வாய்த்தேரைபோலப்பலப்பலநினைக்கின்றேனை
யோம்பிநீயுய்யக்கொள்ளாயொற்றியூருடையகோவே.

நாமார்க்குங்குடியல்லோநமனையஞ்சோநரகத்திலிடர்ப் படோநடலையில்லோ, மேமாப்போம் பிணியறியோம் பணி வோமல்லோ மின்பமேயெந்நாளுந்துன்பமில்லைத், தாமார்க் குங்குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண்குழை யோர்காதிற், கோமாற்கேநாமென்றுமீளாவாளாய்க்கொய் மலர்ச்சேவடியிணையேகுறுகினோமே.

தந்தையார்தாயாருடன்பிறந்தார் தாரமார்புத்திரரார் தாந்தாமாரே, வந்தவாறெங்ஙனேபோமாறேதோ மாயமாமி

தீர்கேதுமகிழவேண்டா, சிந்தையீருமக்கொன்றுசொல்லக் கேண்மின்றிகள்மதியும் வாளரவுந்திளைக்குஞ்சென்னி, எந் தையார்திருநாமநமச்சிவாயவென்றெழுவார்க்கிருவிசும்பிலிரு க்கலாமே.

திருக்கோயிலில்லாததிருவிலூருந் திருவெண்ணீறணி யாததிருவிலூரும், பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும் பாங்கினொடுபலதளிகளில்லாவூரும், விருப்போடுவெண்சங்க மூதாவூரும் விதானமும்வெண்கொடியுமில்லாவூரும், அருப் போடுமலர்பறித்திட் டுண்ணாவூ ரவையெல்லா மூரல்லவட விகாடே.

பெரும்புலர்காலைமூழ்கிப்பித்தர்க்குப்பத்தராகி
யரும்பொடு மலர்கள்கொண்டாங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல்விளக்குத்தூபம்விதியினாலிடவல்லார்க்குக்
கரும்பினிற்கட்டிபோல்வார்கடவூர்வீரட்டனாரே.

விளக்கினாற்பெற்றவின்பமெழுகினாற்பதிற்றியாகுந்
துளக்கினன்மலர்தொடுத்தாற்றூயவிண்ணேறலாகும்
விளக்கிட்டார்பேறுசொல்லின்மெய்ந்நெறிஞானமாகு
மளப்பிலகீதஞ்சொன்னார்க்கடிகடாமருளுமாறே.

திரு அங்கமாலை.

தலையேநீவணங்காய் தலைமாலைதலைக்கணிந்து
தலையாலேபலிதேருந்தலைவனைத் தலையேநீவணங்காய்
தேடிக்கண்டுகொண்டேன் திருமாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத் தேவனையென்னுள்ளே தேடிக்கண்டு
கொண்டேன்

தனிக்குறுந்தொகை.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனலு
மூசுவெண்டறைபொய்கையும்போன்றதே
யீசனெந்தையிணையடிநிழலே.

திரு. எதிர்கொள்பாடி பண்-இந்தளம்

மத்தயானையேறிமன்னர்சூழவருவீர்காள்
செத்தபோதிலாருமில்லைச்சிந்தையுள்வைம்மின்காள்
வைத்தவுள்ளமாற்றவேண்டாவம்மின்மனத்தீரே
அத்தர்கோயிலெதிர்கொள்பாடியென்பதடைவோமே.

---

திருப்புகலூர். பண் .கொல்லி.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர்தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தைபுகலூர்பாடுமின்புலவீர்கா
இம்மையேதருஞ்சோறுங்கூறையுமேத்தலாமிடர்கெடலுமாம் [ள்
அம்மையேசிவலோகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.

வாழ்வாவதுமாயம்மிதுமண்ணாவதுதிண்ணம்
பாழ்போவதுபிறவிக்கடல்பசிநோய்செய்தபறிதான்
தாழாதறஞ்செய்மின்றடங்கண்ணான்மலரோனுங்
கீழ்மேலுறநின்றான்றிருக்கேதாரமெனீரே.

திருக்கோளலி. பண் நட்டராகம்

நீளநினைந்தடியேனுமைநித்தலுங்கைதொழுவேன்
வாளனகண்மடவாளவள்வாடிவருந்தாமே
கோளிலியெம்பெருமான்குண்டையூர்ச்சில்நெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமானவையட்டித்தரப்பணியே.

பொன்னம்பூங்கழிக்கானற்புணர்துணையோடுடன்வாழு
மன்னங்காளன்றில்காளகன்றும்போய்வருவீரோ
கன்னவிறோட்சிறுத்தொண்டன்கணபதீச்சரமேய
வின்னமுதமிணையடிக்கீழெனதல்லலுரையீரோ.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவிசைப்பா.

இவ்வரும்பிறவிப்பவ்வநீர்நீந்துமேழையேற்கென்னுடன்பிறந்த
ரும்பகையேயார்துணையென்ற ஞ்சலென்றருள்செய்வான்கோயி
ல்வைவ

கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக்கடைசியர்களைதருநீலஞ்
செய்வரம்பரும்பும்பெரும்பற்றப்புலியூர்த்திருவளர்சிற்றம்பலமே.

நீறணிபவளக்குன்றமேநின்றநெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோகவெள்ளமேமேருவில்வீரா
வாறணிசடையெம்மற்புதக்கூத்தாவம்பொன்செயம்பலத்தரசே
யேறணிகொடியெம் மீசனேயுன்னைத் தொண்டனே னிசையுமாறி
சையே

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பல்லாண்டு.

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீ
ழாரும்பெறாதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. [கி

குழலொலியா ழொலிகூத்தொலியேத் தொலியெங்குங்குழாம்பெரு
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமிகுதிருவாரூரின்
மழவிடையார்க்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

---

## திருவாசகம்.

ஆடுகின்றிலைகூத்துடையான்கழற்கன்பிலையென்புருகிப்
பாடுகின்றிலைபதைப்பதுஞ்செய்கிலைபணிகிலைபாதமலர்
சூடுகின்றிலைசூட்டுகின்றதுமிலைதுணையிலிபிணநெஞ்சே
தேடுகின்றிலைதெருவுதோறலறிலைசெய்வதொன்றறியேனே.

செழிகின்றதீப்புகுவிட்டிலிற்சின்மொழியாரிற்பன்னாள்
விழுகின்றவென்னைவிடுதிகண்டாய்வெறிவாயறுகா
லுழுகின்றபூமுடியுத்தரகோசமங்கைக்கரசே
வழிநின்றுநின்னருளாரமுதூட்டமறுத்தனனே.

மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்புலனைந்தின்வழியடைத்தமு
தே

வூறிநின்றென்னுளெழுபரஞ்சோதியுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானேதிருப்பெருந்துறையுறைசிவ
னே

யீறிலாப்பதங்கள்யாவையுங்கடந்தவின்பமேயென்னுடையன்பே.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புராணம்.

## விநாயகர் துதி.

வானுலகுமண் ணுலகும்வாழமறைவாழப்
பான்மைதருசெய்யதமிழ்பார்மிசைவிளங்க
ஞானமதவைந்துகரமூன்றுவிழிநால்வாய்
யானைமுகனைப்பரவிபஞ்சலிசெய்கிற்பாம்.

## சபா நாயகர் துதி.

அருமறையின்சிரத்தொழியாயனந்தமாய்ப்பூரணமாயசலமாகி
யொருமுதலாயுண்மையுணர்வாகியானந்தவுருவமாகி
யிருமலமற்றிருப்போர்கள்விருப்பாகிமணிமன்றுளென்றுஞானந்
திருமகிழ்வின்றடஞ்சிதம்பரத்தையென்னுளஞ்சிந்தைசெய்வாம்.

சீராருஞ்சதுர்மறையுந்தில்லைவாழந்தணரும்
பாராரும்புலிமுனியும்பதஞ்சலியுந்தொழுதேத்த
வாராருங்கடல்புடைசூழ்வையமெலாமீடேற
வேராருமணிமன்றுளெடுத்ததிருவடிபோற்றி.

அன்னைமுலைத்தீம்பாலினரிதுசுவைத்தஃதந்தத்
தென்னவனுயுலகாண்டதிருவாலவாயுடைய
மன்னர்பிரான்றனக்கேயாமென்றென்றுவாய்மலர்ந்து
சென்னியசைத்தமுதுசெய்தார்தீவாய்நஞ்சமுதுசெய்தார்.

வானத்தின்மண்ணிற்பெண்ணின்மைந்தரிற்பொருளிலாசை
தானற்றுத்தமையுநீத்துத்தத்துவமுணர்ந்தயோகர்
ஞானக்கண்கொண்டேயன்றிநாடருஞ்சோதிமன்னோ
ரூனக்கண்கொண்டுகாணவுடன்விளையாடல்செய்வான்.

இடருறப்பிணித்தவித்தப்பழியினின்றென்னையீர்த்துன்
னடியிணைக்கன்பனாக்குமருட்கடல்போற்றிசேற்கண்
மடவரன்மணாளபோற்றிகடம்பமாவனத்தாய்போற்றி
சுடர்விரிவிமானமேயசுந்தரவிடங்கபோற்றி.

## சிவகாமியம்மை துதி.

இருபதமுந்துடியிடையுந்திகழுடையுந்தனதடமும்பொற்பூணுங்
கருவிழியுஞ்செவ்வாயும்வெண்ணகையும்பசுந்தோளுங்கழுநீர்க்கை

பு

பொருவருமங்கலநாணுங்கஞ்சமுறுப்புரிநூலும்புனிதன்கண்ணுறுந்
திருவருளுருமலாவுமெழிற்சிவகாமசுந்தரிதாள்சென்னிசேர்ப்பாம்.

## முருகக்கடவுள் துதி.

பாறுமுகம்பொருந்தப்பருந்துவிருந்துண்க முகு
நூற்றுமுகமாயிணைந்துநூற்றில்படுகளம்புகுந்து
மாறுமுகந்தருநிருதர்படிப்படிவேல்விடுத்த
ஆறுமுகன்றிருவடித்தாமரையிணைகளவைபோற்றி.

மாற்றுமுகங்கொண்டுபொருவல்லவுணர்பாழாம
னூறுமுகமெட்டுநேர்தக்கனபுரியத்
தேறுமுகமின்றித்திரிதேவர்தமையாளவன்றே
வாறுமுகங்கொண்டவதரித்தாயேயன்றே.

---

## திருப்புகழ்.

நீரிழிவு குட்டமீளை வாதமொடுபித்தமூல நீள்குளிர்வெதுப்பு
வேறுமுளநோய்கள், நேருறு புழுக்கள் கூடுநான்முக
னெடுத்தவீடுநீடியவிரத்தமூளைதசைதோல்சீ,

பாரிய நவத்துவாரநாறு முமலத்திலாறுபாய் பிணியியற்றுபா
வை—நரிநாய்ப்பேய், பாறுபருந்துகழுக்கள் கூகைதாமிவை
புசிப்பதான பாழுடலெடுத்து வீணிலுழல்வேனோ,

நாரணியறத்திநாரியாறுசமயத்தி பூதநாயகிஅரத்திகாமி—மக
மாயி, நாடகநடத்திகோலநீலவருணத்திவேதநாயகியு
மைச்சிநீலி—திரிசூலி,

வாரணிமுலைச்சிஞானபூரணிகலைச்சிநாகவாணுதலளித்த--வீர
மயிலோனே, மாடமதின்முத்துமேடைகோபுரமணத்
தசோலைவாகுளகுறட்டிமேவு—பெருமாளே.

கருவினுருவாகிவந்து வயதளவிலே வளர்ந்து கலைகள்பலவே
தெரிந்து—மதனாலே, கரியகுழன்மாதர்தங்களடிசுவ
டுமார்புதைந்துகவலைபெரிதாகிநொந்து—மிகவாடி,

அரகரசிவாயவென்று தினமுநினையாமனின்று மறுசமயநீதி
பொன்று—மறியாம, லசனமிடுவார்கடங்கண் மனைக
டலைவாசனின்றுமனுதினமுநாணமின்றி—யழிவேனோ.

உரகபடமேல்வளர்ந்த பெரியபெருமாளரங்கருலகளவுமான்ம
கிழ்ந்த—மருகோனே, உபயகுலதீபவங்க விருதுகவி
ராஜசிங்கமுறைபுகலியூரிலன்று—வருவோனே,

பரவைமனைமீதிலன்று ஒருபொழுது தூதுசென்றபரமனரு
ளால்வளர்ந்த—குமரேசா, பகையசுரர்சேனைகொன்று
வமரர்சிறைமீளவென்று பழனிமலைமீதினின்ற—பெரு
மாளே.

முற்றிற்று.

---

## இப்புத்தகம் அச்சிட்டு வெளிப்படுத்துதற்கு பொருளுதவிசெய்த

# பிரபுக்களின் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| வட்டுக்கிழக்குச் சிங்கப்பூர்தோட்ட வியாபாரம் | | | |
| | அ. வேற்பிள்ளை | ரூபா | 60-00 |
| வட்டுக்கிழக்கு | இ. இராசா | ,, | 30-00 |
| | சு. பொன்னையாபிள்ளை | ,, | 10-00 |
| | வே. பொன்னம்பலம்பிள்ளை | | 10-00 |
| வண்ணார்பண்ணை கச்சேரி | | | |
| | ம. சி. இராமலிங்கமுதலியார் | | 10-00 |
| வயித்தியசிரோன்மணி | | | |
| | க. முத்துக்குமாருப்பிள்ளை | | 10-00 |

---